<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No.220/2023</u>

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி-3(PW-3)**-ன் வாக்குமூலம்** (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **முருகையன்** | தொழில் | : | **இராணுவ வீரர் ஓய்வு** |
| த/பெ. | : | **கருப்பையன்** | **ஊர்** | : | **நாச்சியார்ப்பட்டி** |
| வயது | : | 79 | மாவட்டம் | : | **தஞ்சாவூர்** |

<u>19.08.2025</u>

**<u>எதிரி ஆஜர் இல்லை . கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் நாச்சியார்பட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா மகன், சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அ.சா.1 என்னை அவரது பாத்திரக்கடைக்கு வரும்படி அழைத்தார். அந்த கடைப் பெயர் சாமி பர்னிச்சர். நான் கடைக்கு சென்று பார்த்தபோது கடையின் ஓடுகள் பிரிக்கப்பட்டிருந்தது. பாத்திரம், மேஜை அங்கு அங்கு நகர்ந்து இருந்தன. பித்தளை பொருட்கள் காணமல் போய்யிருந்தது. ரொக்கம் பணம் ரூபாய் 25,000/- காணமல் போய்யிருந்தது என்று சொன்னார். அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./-எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>

<u>CC. No.220/2023</u>

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19–ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி–4(PW–4)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **மருதையா** | தொழில் | : | **கிராம நிர்வாக அலுவலர் ஓய்வு** |
| த/பெ. | : | **பக்கிரிசாமி** | ஊர் | : | **பூதலூர்** |
| வயது | : | 74 | மாவட்டம் | : | **தஞ்சாவூர்** |

<u>19.08.2025</u>

**<u>எதிரி ஆஜர் இல்லை . கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் பூதலூரில் வசித்து வருகிறேன். அ.சா.1யை தெரியும். அவர் பாத்திரக்கடை வைத்துள்ளார். எனது தம்பி அவர் கடையில் வேலை செய்து வருகிறார். 2019 ஆண்டு ஒருநாள் மதியம் 03.00 மணியளவில், நான்கு நாட்களாக கடை திறக்கவில்லை என்றும், நான் கடை திறக்கவேண்டும் என்றும் சொல்லி என்னை வருமாறு அழைத்தார். நான் சுமார் 05.00 மணியளவில் அந்த கடைக்கு சென்றேன். நான் அந்த கடையை திறந்து பார்த்தபோது ஓடுகள் பிரிந்து இருந்தன. சாமன்கள் சிதறி கிடைந்தன, பித்தளை சாமானும் பணமும் திருட்டு போனதாக எனது தம்பி சொன்னார். எனது தம்பு பெயர் பால்ராஜ். போலீசில் புகார் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.